Registered as a Newspaper

# உதயன்


பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 261

திங்கட்கிழமை 14 ஓகஸ்ட் 2023

வர் ஆண்டு 2054



## ஆர்ப்பாட்டங்களால் வன்முறை வெடிக்கும்

### அவுஸ்திரேலியா எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 14
அவுஸ்திரேலியா இலங்கைக்கான பயண ஆலோசனைகளை மீளாய்வு செய்துள்ளது. ஆர்ப்பாட்டங்கள் காரணமாக அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியதன் அவசியத்தைப் பரிந்துரைத்துள்ளது. »09

## மீண்டும் 10 ஆண்டுகளில் நாடு வங்குரோத்தாகலாம்!!!

### ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 14
இன்று நாம் எடுக்கும் நடவடிக்கைகளால் நாடு 'வங்குரோத்தாகிவிட்டது' என்று குத்தப்பட்ட முத்திரையை அகற்ற முடிந்தாலும், அடுத்த கட்ட நடவடிக்கைகளை விரைவில் எடுக்காவிட்டால் இன்னும் 10 வருடங்களில் மீண்டும் »09

## '13'ஐ நிராகரிக்கும் புத்தியை எம்.பி.க்களுக்குக் கொடுங்கள்

### விசேட பூசை நடத்திய தேரர்

கொழும்பு, ஓக. 14
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் புத்தி தெளிவு ஏற்பட வேண்டும் எனப் பிரார்த்தித்து, பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர், நேற்று மாலை பெப்பிலியான சுனேத்ரா »10

### இலங்கைத் துறைமுகங்களுக்கு

# அடுத்தடுத்து சீனக்கப்பல்கள்; கடுப்பில் இந்திய அரசாங்கம்!

கொழும்பு, ஓகஸ்ட் 14
கொழும்புக்கு ஏற்கனவே வந்து சென்ற சீனக் கப்பல் தொடர்பில் இந்தியா கவனம் செலுத்தியுள்ள நிலையில் சீனாவின் ஆய்வுக் கப்பல் ஒன்று கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்து நிற்பதற்காக எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வரவுள்ளது. இது இந்தியாவுக்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக இந்திய ஊடகமான ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. »09

### முந்த முயன்றதால் விபரீதம்:

## லொறியுடன் மோதியதில் மாணவன் பரிதாபச்சாவு!



யாழ்ப்பாணம், ஓக. 14
லொறியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் லொறியின் சில்லுக்குள் சிக்சி மாணவன் ஒருவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான். »10

### கல்வியன்காட்டு கொலை:

## சிறுமி மீதான துஷ்பிரயோகமே படுகொலைக்குக் காரணம்!

### பொலிஸ் விசாரணையில் 'திடுக்' தகவல்

### சந்தேகத்தில் 2 பெண்கள் உட்பட 6 பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 14
கல்வியன்காடு ஜி.பி.எஸ். வீதியில் அடிகாயங்களுடன் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 2 பெண்கள் உட்பட 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ். மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பொ.மேனன் தலைமையின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் குழுவினர் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.
கணபதிப்பிள்ளை மகேந்திரம் (வயது - 52) என்பவர் அவரது வீட்டில் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவரது உடலில் அடி காயங்கள் »10

## மாவிட்டபுரம் தேர் இன்று

யாழ்., ஓக. 14
வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த காம்யோற்சவப் பெருந் திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெறவுள்ளது. »10

## குளவி கொட்டி பெண் சாவு!

யாழ்., ஓக. 14
ஆலயத்தில் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டிருந்த பெண்ணைக் குளவி கொட்டியதில் நேற்று உயிரிழந்துள்ளார். »10

### விகாரைகளில் கைவைத்தால்

# தமிழர்களின் தலையை வெட்டுவேன்

### மேர்வின் சில்வா 'கொலைவெறி'



கொழும்பு, ஓக. 14
நான் வடக்கு - கிழக்குக்கு வருவேன், நீங்கள் (தமிழர்கள்) விகாரைகளைத் தடுக்க முற்பட்டால், மகா சங்கத்தினர் மீது கை வைக்க முயன்றால் நான் களனிக்கு சும்மா திரும்பி வரமாட்டேன், உங்களின் (தமிழர்களின்) தலைகளை கையில் சுமந்து கொண்டுதான் களனிக்கு வருவேன் என முன்னாள் அமைச்சர் »09

### மலையகத்தில்

## ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பரப்புரைக்கு மக்கள் எதிர்ப்பு

இரத்தினபுரி, ஓக. 14
இறக்குவானை சிறி முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு (இந்தியாவில் இயங்கும் கடும்போக்குத் தீவிரவாத இந்து அமைப்பு) நேற்று நடத்திய கூட்டமொன்றில் அவர்கள் வழங்கிய போதனைக்கு பிரதேச மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன், குறித்த கூட்டத்தை உடனடியாக நிறுத்தி, போதனையாளர்களையும் வெளியேற்றியுள்ளனர்.
பெருந்தோட்டப்பகுதிகளில் அண்மைக்காலமாக ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் செயற் »10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோம்பயன் மயானத்தில் 3 மாதங்களில் எரியூட்டி

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14



கோம்பயன்மனல் மயானத்தில் எரியூட்டி அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. மூன்று மாதங்களுக்குள் எரியூட்டி செயற்பாட்டுக்கு வரும். மருத்துவமனையால் வழங்கப்பட்ட மருத்துவக் கழிவுகளில் சிசுவின் உடற்பாகங்கள் முறையற்ற விதத்தில் அடக்கம் செய்யப்பட்ட விடயம் வேதனையைத் தருகிறது என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வடமாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்;

கோம்பயன் மணல் மயானத்தில் எரியூட்டி அமைப்பதற்காக மாநகரசபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு - உரிய காணி தெரிவு செய்யப்பட்டு- பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் மூன்று மாதங்களில் குறித்த எரியூட்டி செயற்பாட்டுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை தெல்லிப்பழை உட்பட ஏனைய எரியூட்டி வசதியுள்ள மருத்துவமனைகளில் மருத்துவக் கழிவுகள் எரியூட்டப்படுகின்றன.

மருத்துவக் கழிவுகள் அதிகமாகும்போது தெற்கிலுள்ள தனியார் எரியூட்டி மையங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

கோம்பயன்மணல் மயானத்தில் முறையற்ற விதத்தில் புதைகுழிகள் பராமரிப்பின்றி காணப்பட்டதால் சிசுவொன்றின் உடற்பாகம் வெளிவந்திருந்த சம்பவம் கவலையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

மருத்துவமனைக் கழிவுகளை மாநகரசபையின் கீழ் இயங்கும் கோம்பயன் மணல் மயானத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் பணியாளர்களிடம் ஒப்படைப்பதுண்டு. உடற்கழிவுகளை கௌரவமாக அடக்கம் செய்வதற்கு மருத்துவமனையினால் கொடுப்பனவும் வழங்கப்படுகிறது. இவ்வாறான சம்பவங்கள் இனியும் நிகழக்கூடாதென அறிவுறுத்தியுள்ளோம் - என்றார். (ச-125)

# கலை நிகழ்வும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஓக. 14

ஓவியர் ஆசை இராசையாவின் 77 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு 'பிரம்மம்' என்ற தலைப்பிலான நினைவு கூரலும் ஓவியக் கண்காட்சியும் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பேராசிரியர் தா.சனாதனன் தலைமையில் நிகழ்வு நடைபெறும்.

சிரேஷ்ட விரிவுரையாளர் சி.ரமணராஜா நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார்.

ஆசிரியர் எஸ்.சிறீகண்ணனின் நெறியாள்கையில் ஓவியர் ஆசை இராசையாவின் வாழ்க்கையை மையப்படுத்திய நடன ஆற்றுகையும், காயத்ரியின் நெறியாள்கையில் 'பரதம் மற்றும் யோகாவின் தெய்வீக இணைப்பு' என்ற ஆற்றுகையும் நிகழ்த்தப்படவுள்ளன. (ச-125)

# மருந்து ஒவ்வாமை மற்றொருவர் சாவு!

## நுண்ணுயிர் எதிர்ப்புக்கு தடை

கொழும்பு, ஓக. 14

கம்பஹா மாவட்ட மருத்துவமனையில் நோயாளி ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பயன்பாட்டை நிறுத்துமாறு சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உடலில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெற்றுவந்த நோயாளியே உயிரிழந்துள்ளார் என்று மருத்துவமனையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். சிகிச்சையின்போது கொடுக்கப்பட்ட நுண்ணுயிர்கொல்லி எதிர்ப்பு மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டதன் காரணமாகவே நோயாளி உயிரிழந்துள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து, குறிப்பிட்ட நுண்ணுயிர் எதிர்ப்புகளின் பயன்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன குறிப்பிட்டார். (ச-இ)

# சிறுமிகளுக்கு தொந்தரவு சந்தேகநபருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஓக. 14

அல்லைப்பிட்டியில் சிறுமிகளுக்குப் பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் கைதாகிய சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் 11 வயதான சிறுமி உயிர் மாய்த்துக் கொள்ள முயற்சித்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு காப்பாற்றப்பட்டார்.

அவருக்கு வழங்கப்பட்ட உளவள சிகிச்சையின்போது அல்லைப்பிட்டி - வெண்புரவி நகர்ப்பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞர் ஒருவர், தான் உட்பட்ட ஐந்து சிறுமிகளை தொலைபேசியூடாக பாலியல் தொந்தரவுக்குள்ளாக்கினார் எனத் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் மருத்துவமனையூடாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. ஊர்காவற்றுறைப் பொலிஸார் சந்தேகநபரை கைதுசெய்து ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தினர்.

சந்தேகநபரை எதிர்வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-125)

# இடநெருக்கடி எதிரொலி

# நவீனத்துடன் மிகப்பெரிய சிறைச்சாலை விரைவில்!

கொழும்பு, ஓக. 14

வெலிக்கடை சிறைச்சாலையைவிட நான்கு மடங்கு பெரிய சிறைச்சாலையொன்று நவீன வசதிகளுடன் ஹொரணையில் அமைக்கப்படவுள்ளது என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் அநுராதா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெலிக்கடை சிறைச்சாலையை இடமாற்றி அதன் காணியை விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி வெலிக்கடை சிறைச்சாலை அமைந்துள்ள காணியின் பெறுமதி 32 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. வெலிக்கடை சிறைச்சாலை ஹொரணை பகுதிக்கு இடம்மாற்றப்படவுள்ளது. அங்கு சிறைச்சாலை அமைப்பதற்காக ஹொரணை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 200 ஏக்கர் காணி பெறப்பட்டுள்ளது. சிறைச்சாலை அமைக்க 100 கோடி ரூபாவுக்கு மேற்படாத வகையில் திட்ட அறிக்கையை வழங்க சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது சிறைச்சாலையில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் புதிய சிறைச்சாலையை நவீன வசதிகளுடன் தற்போதைய சிறைச்சாலையை விட நான்கு மடங்கு பெரிதாக அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் திறந்தவெளி சிறைச்சாலை முறையை மேம்படுத்துவதற்கும், சிவில் குற்றவாளிகளுக்கு புவிசார் குறியிடல் முறையை அறிமுகப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# நீர்மின் உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டது!

கொழும்பு, ஓக.14

சமனலவெவ மின் உற்பத்தி நிலையத்தின் மின்சார உற்பத்தித் திறன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு வேகமாகக் குறைவடைகின்றமையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மின் உற்பத்தி நிலையத்தின் நுழைவாயிலில் நீர்ச்சூழல் அபாயம் ஏற்பட்டுள்ளதால், மின் உற்பத்தித் திறனும் குறைந்துள்ளது என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை- தென் மாகாணத்தில் மின் பரிமாற்றக் கட்டமைப்பின் கொள்ளளவை அதிகரிக்கும் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் எதிர்வரும் 5 நாள்களுக்குள் நிறைவு செய்யப்படும் என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை மின்உற்பத்தி நிலையத்தில் செயலிழந்துள்ள இரண்டாவது மின்பிறப்பாக்கி பழுதுபார்க்கப்பட்ட பின்னர், எதிர்வரும் புதன்கிழமை இரவுக்குள் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என்றும் இலங்கை மின்சாரசபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (எ-இ)

# இளைஞரைக் காணவில்லை பொலிஸாரிடம் முறைப்பாடு

நெடுந்தீவில் இளைஞர் ஒருவர் காணாமற்போயுள்ளார் என்று நெடுந்தீவுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற தம்பிப்பிள்ளை விதுசன் (வயது-27) என்ற இளைஞர் வீடு திரும்பவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு 14ஆம் வட்டாரத்தில் கட்டப்பட்டிருந்த தெப்பம் ஒன்று காணாமற் போயுள்ளது என்றும், அதில் இளைஞர் சென்றிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இளைஞர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் 0212215222 என்ற இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம் என்று நெடுந்தீவுப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (எ-125)

# இலங்கையின் இலக்கு டிஜிற்றல் பொருளாதாரம்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

டிஜிற்றல் பொருளாதாரத்தை நோக்கி பயணிப்பதே இலங்கையின் எதிர்கால இலக்கு என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில், மும்பையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'இலங்கையில் முதலீடு' என்ற மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வலுவான பேரின பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல், டிஜிற்றல் பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரம், அதிக போட்டி நிறைந்த பொருளாதாரத்தை நோக்கி நகர்தல், விரைவான பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சியை நோக்கிச் செல்லத் தேவையான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளுதல் என்பன இலங்கையின் எதிர்காலத்துக்கான பிரதான உத்திகளாகும் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எரிபொருள் விலையேற்றம்

# நீண்டதூர மீன்பிடியை கைவிடும் மீனவர்கள்!

### பிற மீனவர்கள் அத்துமீற வாய்ப்பு

**கொழும்பு, ஓக.14**

**எரிபொருள் விலையேற்றம் காரணமாக நடுக்கடல் மீன்பிடியை (தங்கியிருப்பு முறையிலான மீன்பிடி) மீனவர்கள் கைவிட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால், இலங்கையின் கடலெல்லைகளில் பிறநாட்டு மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.**

இலங்கையைச் சுற்றி 23 மீன்பிடித் துறைமுகங்கள் உள்ளன. மீன்பிடி மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின்கீழ் 5 ஆயிரத்து 500 பலநாள் மீன்பிடிப் படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் ஆயிரத்து 600 படகுகள் வங்காள விரிகுடாவின் வடக்குப் பகுதியில் அரபிக்கடலின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் பயணம் செய்கின்றன.
பல நாள் கடல் மீன்பிடிப் படகின் ஒரு பயணத்துக்கு 8 ஆயிரம் முதல் 12 ஆயிரம் லீற்றர் டீசல் தேவைப்படுகிறது. ஆனால், எரிபொருள் விலையேற்றம் காரணமாக தொலைதூரக் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற மீன்பிடிப் படகுகள் தற்போது இலங்கைக் கடற்பரப்புகளுக்குள் மிகக் குறுகிய அளவில் மீன்பிடி நடவடிக்கைகளைமட்டுப்படுத்திக்கொள்ளும் நிலைக்கு மாறியுள்ளன. இதனால், தொலைகடலில் ஏற்பட்ட வெற்றிடத்தில், பிறநாட்டு மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன், இலங்கையின் மீன் உற்பத்தியிலும் இது தாக்கம் செலுத்தும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-இ)

## வாகன இறக்குமதி: கட்டுப்பாடு தளர்வு!


கொழும்பு, ஓக. 14

பொதுப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விரைவில் நீக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.
பொதுப் போக்குவரத்துக்காகக் பயன்படுத்தப்படும் பேருந்துகள் மற்றும் பாரவூர்திகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்படவுள்ளன. இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் வாரத்துக்குள் வெளியிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## 10 ஆம் தரத்தில் சா/த பரீட்சை?

கொழும்பு, ஓக. 14

எதிர்காலத்தில் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையை 10ஆம் தரத்தில் நடத்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.
கொழும்பு றோயல் கல்லூரியில் நடந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஆரம்ப காலத்தில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு மாணவர்கள் 10ஆம் தரத்தில் தோற்றிய போதும் பிற்காலத்தில் அது 11ஆம் தரமாக மாற்றப்பட்டது.
அந்தப் பரீட்சையை மீண்டும் 10ஆம் தரத்தில் நடத்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பில் சிந்தித்து வருகின்றோம்.
மிகக் குறுகிய காலத்தில், மிக வேகமாக அறிவு இரட்டிப்பாகும் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, கல்வியில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டங்கள் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன - என்றார். (ம)



## செவித்திறன் குறைபாடு உள்ளோருக்கு லைசென்ஸ்

கொழும்பு, ஓக. 14

செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.
இந்த வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் குருநாகலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
வடமேல் மாகாணத்தில் கடந்த காலங்களில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.
ஏனைய நாடுகளில் விசேட தேவையுடையவர்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுகின்றது என்றும், அந்த நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட செயற்றிறன்மிக்க பயிற்சியாளர்களைக் கொண்டு இங்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார். (எ-இ)

## கெசினோ சூதாட்டத்துக்கு வரி அதிகரிக்கத் திட்டம்!

கொழும்பு, ஓக. 14

நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் பொருளாதார மறுசீரமைப்புகளை மையப்படுத்தி கெசினோ சூதாட்ட வரியை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;
வரி அதிகரிப்பு சட்டவரைவு குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.
இந்தச் சட்டவரைவு இன்னமும் முழுமைப்படுத்தபடாத நிலையில் அமைச்சர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ச-இ)




இப்ப பள்ளிக்கூடங்களில படிப்பைத் தவிர மிச்ச எல்லாத்தையும் வடிவாச் சொல்லிக்குடுக்கினம் போல. முக்கியமா சின்னப் பிரச்சினைக்கும் பிள்ளையளை றோட்டில இறக்கி, வெயிலுக்க பதாகையளோட நிக்க வைச்சு அதுகளைப் பலிக்கடாவாக்கிற வேலையள் வேலணையில இருந்து வலிகாமம் வரைக்கும் அமர்க்களமா நடக்குது.

வலிகாமம் வலயத்தில உள்ள பேமஸான கல்லூரி ஒண்டில, கிட்டடியில ஏ.எல். எடுக்கிற பிள்ளையளின்ர பெற்றோரோட ஒரு சந்திப்பு நடந்தது. அதுக்கு ஒரு பதினைஞ்சு பிள்ளையளின்ர பெற்றோர் வரேலை. இப்பிடியான கூட்டங்களில நூறுசதவீத வரவை எதிர்பார்க்கேலாது தானே. அவைக்கும் ஏதும் அவசரமான சோலிசுறட்டு இருந்திருக்கலாம். ஆனால் பிள்ளையளின்ர படிப்பைவிட அவைக்கு சோலியள் அவ்வளவு முக்கியமுமில்லைத்தானே. பள்ளிக்கூடத்து அதிபர் தான் கிழிச்ச கோட்டை ஆரும் தாண்டக்கூடாது எண்டதில கடும்பிடிகாரர். அவருக்கு அந்தப் பிள்ளையளின்ர பெற்றோர் வராதது கடும் கோபம். மீட்டிங் நடக்கேக்கையே பெற்றோர் வராத பிள்ளையளை அந்த மீட்டிங் நடந்த மண்டபத்துக்கு வெளியில ரண்டு, மூண்டு மணித்தியாலம் நிக்க வைச்சிருக்கிறார். ஆனா அப்பிடி தான் விடேல எண்டும் ரீச்சர்மார் தான் விட்டவை எண்டும் அதிபர் சொல்லுறார். இதுவும் ஒரு உளவியல் தண்டனை தான் எண்டாலும், செவிப்பறை வெடிக்கிற மாதிரி அடிக்காமல் இப்பிடி பட்டும்படாமல் தண்டிக்கிறது பரவாயில்லைத்தான். ஆனால் அந்தப் பெற்றோர் ஏன் வரேல எண்ட காரணத்தை அறிஞ்சு போட்டு தண்டிச்சிருக்கலாம், இல்லாட்டி அந்தநாள் அந்த பதினைஞ்சு பெற்றோரும் அதிபரைச் சந்திக்க வேணும் எண்டு சொல்லி அனுப்பி இருக்கலாம். அப்பிடி எதுவுமே செய்யாமல், 'ஸ்பொட் பைன்' மாதிரி சூட்டோட சூடா, இப்பிடி பிள்ளையளைத் தண்டிச்சதுதான் பிழையாப் போட்டுது. அதிபர் பிள்ளையளை மீட்டிங் மண்டபத்துக்கு வெளியில நிக்க வைச்சதை ஆரோ உள்ளுக்க இருக்கிறவை வீடியோ எடுத்து, அது வெளி யில வெப்சைட்டுகளில உலாத்தத் தொடங்கிட்டுது.

அப்பிடி வெப்சைட்டுகளில தங்கட வீடியோ வந்ததால 'பள்ளிக் கூடத்தின்ர மானத்தைக் கப்பலில ஏத்திப் போட்டினம்' எண்டு சொல்லி, ஒரு மாஸ்ரரை குறிவைச்சு அதிபர் கதைச்சிருக்கிறார். ஏனெண்டால் அந்த மாஸ்ரருக்கும் அதிபருக்கும் எட்டாப் பொருத்தம். எப்பவும் கீரியும் பாம்பும் மாதிரி ரண்டு பேரும் ஒராளைப் பற்றி மற்ற ஆள் டிப்பார்ட்மெண்டுக்கு முறைப்பாடு செய்யிறதும், அதை டிப்பார்ட்மெண்ட் வேலைமினக்கெட்டவன் பூனையைப் பிடிச்சு சிரைச்ச மாதிரி வந்து விசாரிச்சுப் போட்டு போறதும் வாடிக்கையா இருந்திருக்கு. மாஸ்ரர் மேலையும் பிள்ளையள் தரப்பால நிறைய முறைப்பாடாம். அதால தன்னில உள்ள கோபத்தை இப்பிடி வீடியோ எடுத்து அந்த மாஸ்ரர் காட்டியிருக்கிறார் எண்டு அதிபர் துள்ளிக் குதிச்சிருக்கிறார். அந்தப் பிரச்சினையை அதோட விட்டிருந்தாலோ, இல்லாட்டி டிப்பார்ட்மெண்ட் மூலம் தீர்த்திருந்தாலோ ஒரு பிரச்சினையுமில்லாமல் போயிருக்கும். ஆனால் அந்த மாஸ்ரர் வீடியோ எடுத்து பள்ளிக்கூடத்தை அவமானப்படுத்திப் போட்டார் எண்டு பொலிஸிலை போய் அதிபர் முறைப்பாடு செய்து, பொலிஸூம் அவரைக் கூப்பிட்டு விசாரிச்சிருக்கு. அதோட அடங்காமல், பள்ளிக்கூடம் முடிஞ்சதும் பிள்ளையள் கொஞ்சப்பேரை றோட்டில இறக்கி 'பள்ளிக்கூடத்தை அவமானப்படுத்தின ஆசிரியரை வெளியேற்று' என்று கோஷம் போட வைச்சிருக்கினம். வீடியோ எடுத்து வெப்சைட்டில வந்ததைக்கூட கனபேர் பாக்கேலை. ஆனால் பிள்ளையள் இப்பிடி நடுறோட்டில இறங்கி கோஷம் போட்டதால தான் எல்லாருக்கும் இந்த விசயம் தெரியவந்திருக்கு. வீடியோ எடுத்ததால பள்ளிக்கூட மானம் போனதெண்டு கூப்பாடு போடுறவை, இப்பிடி பிள்ளையளை றோட்டில இறக்கி இன்னும் அந்த மானத்தைக் கப்பலில ஏத்திட்டினமே. வேட்டியில பீத்தல் இருக்கிறது அவமானம் எண்டு நினைச்சவன், வேட்டியையே கழட்டி எறிஞ்சுபோட்டு கலியாணவீட்டுக்கு போன கதை மாதிரியெல்லோ இருக்கு அதிபர் செய்த வேலை. இந்த ஆர்ப்பாட்டத்துக்கும் தனக்கும் சம்பந்தமில்லையெண்டும் அதிபர் சத்தியம் செய்யிறாராம். அப்பிடியெண்டால் அவருக்குத் தெரியாமல், நிர்வாகத்தை மீறி பிள்ளையளை தூண்டிவிட்டு ஆர்ப்பாட்டம் செய்விச்ச ஆக்களைக் கண்டுபிடிச்சு அதிபர் 'அக்ஷன்' எடுப்பாரோ? பள்ளிக்கூடங்களுக்குள்ள நிர்வாக ரீதியா என்னவும் செய்யுங்கோ. ஆனால் உங்கட சுயநலத்துக்காக பிள்ளையளைப் பலிக்கடாவாக்கிறதை ஒருக்காலும் நியாயப்படுத்தமுடியாது. உங்கட பல்லுக்க இருக்கிற (பள்ளிக்கூட) சூத்தையை நீங்களே கிண்டி வெளி ஆக்களுக்கு காட்டிப்போட்டு, ஐயோ மானம் போட்டுது எண்டு குய்யோ முறையோ எண்டு கத்துறதும் அழகில்லை.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமுனைப் படுகொலை: அம்பாறையில் அஞ்சலி

மட்டக்களப்பு, ஓக. 14

அம்பாறை - வீரமுனைக் கிராமத்தில் 232க்கும் அதிகமான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதன் 33 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, வீரமுனையில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை கடைப்பிடிக் கப்பட்டது.



1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12ஆம் திகதி வீரமுனையையும் அதன் சுற்றுவட்டக் கிராமங்களான வீரச் சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனை அம்பாறை பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் அங்கிருந்த பிள்ளையார் கோயில் வள வுக்குள்ளும் வீரமுனை இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையிலும் தஞ்சம் புகுந்திருந்தனர். அதன்போது மர்மக் குழுவொன்றால் பொதுமக் கள் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## வடக்கில் மழை!

யாழ்ப்பாணம், ஓக. 14

வடமாகாணத்தில் இன்று பரவலாக மழை பெய்யும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு, ஊவா மற்றும் வடக்கு மாகாணங்களில் சில இடங்களில் மாலை அல்லது இரவுவேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். நாட்டின் ஏனைய பகுதிகளில் சீரான வானிலை நிலவும்.

இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாக பலத்த காற்று மற் றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளப் போது மான முன்னெச்சரிக்கை நடவ டிக்கைகளை எடுக்குமாறும் கேட் டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

## ஆடி அமாவாசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஓக. 14

வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் அருள்மிகு கண்ணகாம் பிகா சமேத கண்ணலிங்கேஸ் வரர் கண்ணகியம்மன் ஆல யத்தில் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு ஆடி அமாவாசை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள் ளன.

தொடர்ந்து மதியம் அன்னதான மும் வழங்கப்படும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித் துள்ளனர். (ச)



## மீசாலையில் விபத்து இருவருக்குக் காயம்!

சாவகச்சேரி, ஓக. 14

அரச பேருந்தை முந்திச்செல்ல முற் பட்ட தனியார் பேருந்து வீதியின் மறு பக்கம் சென்று மோட்டார் சைக்கிளு டன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பாடசாலை மாணவியும் முதியவரும் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் மீசாலைச் சந்தியில் கடந்த புதன்கிழமை நடந் துள்ளது.

விபத்தில் காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட நிலையில் மாணவி மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற் றப்பட்டுள்ளார். (ச-9)

# மருத்துவ நெருக்கடி முற்றாக நீங்கவில்லை!

### பொதுமக்களே அவதானம்! அறிவுறுத்துகிறார் சத்தியமூர்த்தி

யாழ்ப்பாணம், ஓக. 14

நாட்டில் சில மருந்துகளுக்குத் தட்டுப் பாடு ஏற்படுகின்றது. எனவே பொது மக்கள் நோய்நிலைகளில் இருந்து தங்களைத் தற்காத்துக்கொள்ள வேண்டும் என்று வடமாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர் மருத் துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி அறிவு றுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

90 வீதமான மருந்துகள் கையிருப் பில் உள்ளபோதும் நீரிழிவு, குருதிய முக்கம் போன்ற நோய் நிலைமை களால் பல்லாயிரகணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதங்களில் இந்த நோயாளர் களுக்கான மருந்துகளுக்குத் தட்டு பாடு நிலவியது.

நோயாளர்கள் அதற்கான மருந்து களை மருந்தகங்களில் வாங்கியுள் ளனர், இது துரதிர்ஷ்டமான நிலைமை. பொருளாதாரம் நலிவுற்றோர் மருந்து களை வாங்கமுடியாத நிலை காணப் படுகிறது. தற்போது சுகாதார அமைச் சின் கீழ் மருந்துக் களஞ்சியசாலையி லிருந்து கிரமமாக மருந்துகள் எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளன. எனினும் பொதுமக்கள் அன்றாட அடிப்படைச் சுகாதார வாழ்க் கையைக் கடைப்பிடித்து. நோய் நிலை களில் இருந்து விலகியிருக்கவேண்டும் - என்றார். (ச-125)

## இன்றைய (ராசிபலன்)



மேடம்: காரியங்கள் அனுகூலமாக முடியும். மனதில் தன்னம்பிக்கை அதி கரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள்.

இடபம்: சிலருக்கு எதிர்பாராத பணவர வுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். சகோதரர்களு டன் மனவருத்தம் ஏற்படக்கூடும்.

மிதுனம்: புதிய முயற்சிகளைத் தொடங்கு வது சாதகமாக முடியும். சிலருக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம். உடல் அசதி உண்டாகவும் கூடும். முன்னெச்சரிக்கை அவசியம்.

கடகம்: மனதில் தன்னம்பிக்கை அதி கரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சுறுசுறுப்பாக இருப்பீர்கள்.

சிம்மம்: எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்களுக்குத் தேவையான உதவி களும் கிடைக்கும். தேவையற்ற விவா தங்களைத் தவிர்க்கவும். பேசும்போது பதற்றம் தவிர்க்கவும்.

கன்னி: சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். காத்திருந்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். காரியம் சாதகமாக முடியும்.

துலாம்: எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. ஆனால், சிலருக்கு அதிகப்படியான செலவுகளால் கடன் வாங்க நேரிடும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

விருச்சிகம்: காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். அந்நியோன்யம் அதிகரிக்கும்.

தனுசு: மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். உதவி ஆறுதல் தரும். சில சிரமங்கள் ஏற்படும்.

மகரம்: சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.

கும்பம்: புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

மீனம்: மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவ னம் தேவை. மகிழ்ச்சி உண்டாகும்.

# பிதிர்களுக்குச் சேமம் தரும் ஆடி அமாவாசை

*நாளை ஆடி அமாவாசையாகும். அதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.*

நா.ஸ்ரீகிருஷ்ணா

ஆடிமாதம் மங்கலகரமான காரியங்களுக்கு விலக்கப்பட்ட மாதமாக இருந்தபோதிலும், ஆடி அமாவாசையால் அது சிந்தையில் பதிகின்றது. மேலும் 'ஆடி மழையில் தேடி விதை' என்பதும் அந்த மாதத்தின் நினைப்பை நீக்குவதில்லை. ஆடி பதினெட்டில் தமிழ் நாட்டில் ஆடிப் பெருக்கு கொண் டாடப்படுகின்றது. இது பழந்தமிழ் நூல்களில் புனலாடல் என்று குறிப்பிடப்படுகின்றது. எனவே ஆடி மாதமும் மக்கள் கூடிக் குலவி மகிழும் மாதமாகின்றது. சித்திரா பௌர்ண மியும் ஆடி அமாவாசையும் சிறப்புப்பெற்றவை. இவை ஆண்டுக்கொருமுறை வரு பவை. மாதம்தோறும் பௌர்ணமியும் அமாவாசையும் வருகின்றபோது சித்திராப் பௌர்ணமியும் ஆடி அமாவாசையும் சிறப்புடையன. ஏனெனில் இவை சகல பௌர் ணமி, அமாவாசை விரதங்களை அனுஷ்டித்த பயனைக் கொடுக்கவல்லன.

இந்த மாதம் ஐம்பெரும் வேள்விகளைப் பற்றிக் கூறுகின்றது. இவற்றுள் பிதிர் வழிபா டும் ஒன்றாகும். வள்ளுவர் பிதிர்களைத் தென்புலத்தார் என்று கூறுகிறார். தென் திசைக் கடவுள் யமன். எனவே யமனிடம் சென்றவர்களைத் தென்புலத்தார் எனலாம். பிதிர் வழி பாட்டுக்குச் சிறந்த தினங்கள் சித்திராப் பௌர்ணமியும் ஆடி அமாவாசையும் ஆகும். நாம் சௌக்கியமாக வாழ வேண்டுமென்றால் தேவர்களை ஆராதிக்கவேண்டும். பிதிர் களைத் திருப்தி செய்யவேண்டும். தேவர்களைப் பிரீதி செய்வதற்காக ஹோமங்கள், யக்ஞங்கள் செய்யப்படுகின்றன. பிதிர்களைப் பிரீதி செய்வதற்காக சிரார்த்தம், தர்ப் பணம் ஆகியன செய்கிறோம். தெய்வ காரியங்களுக்கு பக்தி வேண்டும். பிதிர் காரி யங்களுக்கு சிரத்தை வேண்டும். சிரத்தையாகச் செய்யப்படுவதால்தான் சிரார்த்தம் எனப்பட்டது.

சிரத்தை இல்லாதவன் தேவர்களுக்கு நிவேதனம் அளிக்கத் தகுதியற்றவன். சிரத்தை யுடன் அளிக்கப்படும் உணவைத் தான் விருந்தாளி உண்ணவேண்டும். மாதந்தோறும் வரும் பௌர்ணமி அமாவாசைத் தினங்களை அனுஷ்டிக்க இயலாதவர்கள், வருடத் துக்கு ஒருமுறை வரும் சித்திராப் பௌர்ணமியையும் ஆடிஅமாவாசையையும் அனுஷ் டித்து தென்புலத்தாருக்குரிய கடமையைத் தவறாது நிறைவேற்ற வேண்டும். அவர்க ளைத் திருப்பதிப்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலின் திட்டம் இதுதான்

இலங்கையில் தற்போது 'சிங்கள – பௌத்த பேரினவாத அலை' மீண்டும் தீவிரமாகவும் தீர்க்கமாகவும் வீச ஆரம்பித்திருக்கின்றது. '13 ஆவது திருத்தம் தேவையற்றது. 13 தொடர்பான ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு எதிராக, தெற்கிலுள்ள அதிருப்தியாளர்களை போராட்டங்கள் மூலமாக ஒன்றிணைப்போம்' என்று அப்பட்டமாக அறிவித்திருக்கின்றார் கம்மன்பில. தவிர, ஆளும் பெரமுன, பௌத்த அதிகாரபீடங்கள் என்பனவும் '13'க்கு கனதியான எதிர்ப்பைப் பதிவுசெய்து அதை மீண்டும் தூக்கித் தூர எறியும் அளவுக்கு நிலைமையைக் கொண்டுவந்திருக்கின்றன. இங்குதான் ஒரு இராஜதந்திரியாகவும் கடைந்தெடுத்த சிங்கள அரசியல்வாதியாகவும் தன்னுடைய நகர்வுகளால் எதை நினைத்தாரோ அதைச் சாதித்திருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அது என்ன நகர்வு?

2015 – 2019 வரையிலான நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லப்பட்ட மைத்திரி – ரணில் ஆட்சிக் காலத்தில் புதிய அரசமைப்புக்கான வரைவு உருவாக்கப்பட்டது. அரசமைப்பு உருவாக்க நடவடிக்கையில் முழுமூச்சாக தலைமைதாங்கிச் செயற்பட்டவர்களில் பிரதானமானவர் இப்போதைய ஜனாதிபதியும் அப்போதைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க. புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக ரணில் தலைமையில் வழிநடத்தல் குழு அமைக்கப்பட்டது. அது சுமார் 81 கூட்டங்களையும் நடத்தியிருந்தது. வழிநடத்தல் குழுவில் ஆராயப்படும் விடயங்களை ஊடகங்களுக்கோ வெளியிலோ சொல்வதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டிருந்தது. அரசமைப்பு உருவாக்கத்தில் பல்வேறு விடயங்களும் ஆராயப்படும்போது அது வெளியில் தெரியவந்தால் தேவையற்ற குழப்பங்களை நாட்டில் ஏற்படுத்தி, புதிய அரசமைப்பு உருவாக்கத்தை சீர்குலைக்கும் என்று அப்போது காரணம் சொல்லப்பட்டது, அது நியாயமாகவும் இருந்தது.

அப்போது அப்படிச் சொன்ன ரணில் விக்கிரமசிங்க இன்று ஜனாதிபதியாகி, அரசமைப்பிலுள்ள 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக அதுதொடர்பில் நாடாளுமன்றத்தின் கருத்தை அறிகிறேன், கட்சிகளின் கருத்தை அறிகிறேன் என்று அதனைப் பொதுவெளியில் தம்பட்டம் அடித்திருந்தார். அவர் அவ்வாறு செய்ததன் நோக்கத்தை இன்று அடைந்தும் விட்டார். அவர் எதிர்பார்த்ததைப்போன்று 13 ஆவது திருத்தம் நடைமுறையாக்கம் என்றதும் கோத்தாபய தப்பியோடிய பின்னர் தூங்கிக்கொண்டிருந்த சிங்களப் பேரினவாதம் மீண்டும் உருக்கொண்டு எழுந்து நிற்கின்றது. இதைத்தான் ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்தார். அவரைப்பொறுத்தவரையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது நோக்கமல்ல. மாறாக காலத்தைக் கடத்தி, தனது பதவியை தக்கவைப்பதுதான் ரணிலின் திட்டம். அதற்காகவே, சத்தம் சந்தடியில்லாமல் தனது நிறைவேற்றதிகாரத்துக்கு உட்பட்ட வகையில் நிறைவேற்றிவிட்டுப் போகவேண்டிய 13 ஆவது திருத்தத்தை வீதிக்குக் கொண்டு வந்திருக்கின்றார். இனி என்ன, சிங்களவர்கள் எதிர்க்கின்றார்கள், மகாநாயக்க தேரர்கள் விடுகிறார்கள் இல்லை, என்னிடம் பெரும்பான்மை இல்லை, நாடாளுமன்றத்தில் சம்மதிக்கிறார்கள் இல்லை என்று ஏதாவது ஒன்றைச் சொல்லி அதைக் கிடப்பில் போட்டுவிட்டு பேசாமல் இருக்கமுடியும். ஏலவே சொன்னதைப் போன்று அந்தக் காட்சிகள்தான் தற்போது அச்சுப்பிசகாமல் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போது குழப்பம் வரும் என்பதால் இரகசியம் காத்த ரணில் விக்கிரமசிங்க இப்போது 13 ஆவது திருத்தத்தை பகிரங்கப்படுத்தி மேற்கொண்ட நகர்வின் பின்னால் இருப்பது அரசியல் தீர்வைக் காண்பதில் அவருக்கு இருக்கும் விருப்பின்மையே. இதனை உணர்ந்து நடந்தால் தமிழர் தரப்பு இன்னொருமுறை ஏமாறும் கதையை வரலாற்றின் பக்கங்களில் தவிர்க்கலாம்.

### நாளொரு நல்வார்த்தை

எங்கே அடக்குமுறையும்
ஒடுக்கு முறையும்
தலைவிரித்து ஆடுகிறதோ
அங்கே புரட்சி வெடிக்கும்.
- சேகுவேரா -




## 13 ஐ நடைமுறைப்படுத்தினால் போராட்டங்கள் வெடிக்கும்!

### கம்மன்பில எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 14

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால், நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் வெடிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி முயலக்கூடாது. 13 பிளஸ் என்ற சிந்தனையால்தான் 2015ஆம் ஆண்டு மஹிந்த வீட்டுக்கு அனுப்பப்பட்டார். எனவே அவ்வாறான நடவடிக்கையில் ஜனாதிபதி ரணில் ஈடுபடுவாராயின், 13க்கு எதிராக தென்னிலங்கையில் இருக்கும் எதிர்ப்பை ஒன்றிணைப்போம்.
விகிதாசார தேர்தல் முறைமையை இரத்துச் செய்வதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். விகிதாசார தேர்தல் முறைமையை இரத்துச் செய்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மையினத்தவர்களாக வாழும் சிங்களவர்கள் உள்ளூராட்சி சபைகளுக்கான பிரதிநிதித்துவத்தில் பாதிக்கப்படுவார்கள்.
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள், முஸ்லிம்கள் குறித்து கவனம் செலுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்களவர்களை இரண்டாம் பட்சமாக்கியுள்ளார் - என்றார். (ம)

## சிங்கராஜவுக்குள் நுழைந்த ஈரானியர்களுக்கு அபராதம்!

கொழும்பு, ஓக. 14

சிங்கராஜ வனத்துக்குள் நுழைந்த ஈரானியப் பிரஜைகளுக்கு ஒரு கோடியே முப்பத்திரண்டு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
சட்டவிரோதமாக நுழைந்ததுடன் மட்டுமல்லாது, சிங்கராஜவனத்தில் சேகரித்த பூச்சிகள், தாவரப் பாகங்கள் மற்றும் காளான்கள் உள்ளிட்டவையும் அவர்களிடம் மீட்கப்பட்டுள்ளன. இதையடுத்தே அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அபராதத் தொகையை ஏற்றுக்கொள்ளாவிட்டால், ஒவ்வொருவருக்கும் தலா 5 மாதகாலச் சிறைத்தண்டனையும், 2 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்படும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-26)

## இந்தியாவுக்கான தூதுவராக சேனுகாவை நியமிக்க முடிவு

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக, தற்போது ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றும் சேனுகா செனவிரட்ண நியமிக்கப்படவுள்ளார்.
இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக தற்போது செயற்பட்டுவரும் மிலிந்த மொறகொட, செப்ரெம்பரில் தனது பதவியை முடித்துக் கொள்ளவுள்ள நிலையிலேயே சேனுகா அவரின் இடத்துக்கு நியமிக்கப்படவுள்ளார். சேனுகா, நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகவும், பிரிட்டன் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான தூதுவராகவும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

| நாளை | 15.08.2023 செவ்வாய்க்கிழமை ஆடி 30 | சுபநேரம் : 10.35 – 12.05<br>ராகுகாலம் : 03.05 – 04.35<br>ஆடி அமாவாசை விரதம் |
|---|---|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத் துறைக்கென விரைவில் பல்கலைக்கழகம்

## இராஜாங்க அமைச்சர் ரோஹண தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 14

விளையாட்டுத்துறையில் தேர்ச்சியுடன் பட்டப் படிப்பை நிறைவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில், பல்கலைக்கழகமொன்று நிறுவப்படவுள்ளது என்று விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இளைஞர்கள் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பும், நம்பிக்கையையும் வைத்துள்ளார். அதன்படி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகளை பிரதேச ரீதியில் செயற்படுத்த ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், தேசிய இளைஞர் படையணி ஊடாகவும் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குவதுடன் அவர்களுக்கு திறன்விருத்தி, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகள், சர்வதேச மொழிகளைக் கற்றுக்கொடுத்தல் மற்றும் சர்வதேச அளவில் சிறந்த வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக விளையாட்டு வீரர்களைத் தெரிவுசெய்யும்போது இதுவரை பல்வேறு பிரச்சினைகள் தோன்றின.

அவற்றைத் தீர்த்து வைப்பதற்காகத் தற்போது தேசிய விளையாட்டுச்சபை நிறுவுப்பட்டுள்ளது. அத்துடன் விளையாட்டுப் பல்கலைக்கழகமொன்றை நிறுவி, விளையாட்டுத்துறையை அடுத்த கட்டத்துக்கு மேம்படுத்திச் செல்லவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

# ஆட்சிக் கவிழ்ப்பு: ஜே.வி.பி. முயற்சியாம்

## ஜனாதிபதி குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 14

**நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தி, பொதுமக்களை வன்முறையாளர்களாக்கி ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொள்வதற்கு, ஜே.வி.பி. தலைமையிலான குழு சதியில் ஈடுபட்டுள்ளது. இதன் பின்னணியில் பிரபல ஊடகம் ஒன்றும் உள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஆளும் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் காணப்படும் வறட்சியை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியும், பிரபல ஊடகம் ஒன்றும் வன்முறைகள் ஊடாக ஆட்சிக் கவிழ்ப்பு சதியை முன்னெடுத்து வருகின்றன. கடந்த ஆண்டைப் போன்று மக்களை வன்முறையாளர்களாக்கி, வீதியில் இறங்கி அரச எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த வன்முறைப் போராட்டங்களின் இறுதி இலக்கு ஆட்சிக் கவிழ்ப்புச் சதியாகும். இதனை மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான குழுவே முன்னெடுக்கின்றது. சதித் திட்டத்துக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன, புலனாய்வு அறிக்கைகளும் உறுதிப்படுத்தியுள்ளன. மீண்டும் நாட்டை வன்முறைக்குள் கொண்டுச்செல்ல இடமளிக்கமுடியாது. எனவே ஜே.வி.பியின் ஆட்சிக் கவிழ்ப்பு சதிகுறித்து கவனத்தில் கொள்ள விசேட நாடாளுமன்ற தெரிவுக்குழுவை எதிர்வரும் நாள்களில் நியமிக்கவுள்ளேன்.

பாதுகாப்புத் தரப்புகளுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கடுமையான பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாடு தற்போது ஒரு சுமுகமான நிலைக்கு வந்துள்ளது. பொருளாதார மறுசீரமைப்புகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களின் முழுமையான ஒத்துழைப்புகள் பொருளாதார மறுசீரமைப்புகளுக்குக் கிடைத்துள்ளன. பல்வேறு மக்கள் நலசார்ந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகண்டு, அனைத்து வழிகளிலும் நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல முயற்சிகளை முன்னெடுத்துள்ளேன். இவற்றை சீரழித்தும் நாட்டின் அமைதியை சீர்குலைக்கவுமே முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (ம)

# ஹைஏஸுடன் மோதி இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஓக. 14

கைதடி- நுணாவில் இணைப்பு வீதியோரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஹைஏஸ் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. அதேயிடத்தைச் சேர்ந்த 35 வயதுடைய இளைஞரே காயமடைந்துள்ளார். விபத்து தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-131)

# தனியாரிடமிருந்து மின் கொள்வனவு

## அரசாங்கம் தீர்மானம்

வறட்சியான காலநிலையால் நெருக்கடிக்குள்ளாகியுள்ள அரசாங்கம் தனியார் துறையிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கவும் தீர்மானித்துள்ளது.

தனியார் துறையினரிடமிருந்து அவசர மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை இந்த வாரம் அனுமதியளித்துள்ளது. ஆறுமாத காலத்துக்கு நாளாந்தம் 100 மெகாவாட்ஸ் மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அடுத்தமாதம் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை - நீர்மின்சார உற்பத்தி பாதிக்கப்படுவதால் தேவை அதிகரிக்கும் என தெரிவித்துள்ள இலங்கை மின்சாரசபை நாளாந்தம் 150 மெகாவாட்ஸ் மின்சாரத்தைக் கொள்வனவு செய்யவேண்டியிருக்கும் எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை - வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டை வழங்குவது தொடர்பில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று அமைச்சர் மஹிந்த சமரவீர தெரிவித்துள்ளார். (எ-இ)




# ஆபரண ஏற்றுமதியில் வருவாய் காணுங்கள்

## ஜனாதிபதி பணிப்புரை

இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில் சார் ஏற்றுமதியை மேம்படுத்துவதன் மூலம் வருடாந்தம் அதிக ஏற்றுமதி வருமானத்தை ஈட்ட முடியும். அந்த இலக்கை அடைவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை உடன் சமர்ப்பியுங்கள் என துறைசார் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆபரணத் தொழிற்றுறை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையின் அபிவிருத்திக்கான வரிக் கொள்கைகள் தொடர்பான பரிந்துரைகள் துறைசார் கண்காணிப்புக் குழுவால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையை பாதிக்கும் வரிகள் மற்றும் ஏற்றுமதி, மீள்ஏற்றுமதி செயன்முறைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது. இந்தத் துறையில் இதுவரை ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் உரிய தரப்பினர் ஜனாதிபதியிடம் தகவல்களை முன்வைத்தனர். இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடையவில்லை.

இந்தத் துறையால் வருடாந்தம் அதிக ஏற்றுமதி வருமானத்தை ஈட்ட முடியும். அதற்கமைய வருடாந்தம் குறைந்தது இரண்டு பில்லியன் அமெரிக்க டொலரை இலக்காகக் கொள்ள திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துங்கள். அதற்கான முறையான திட்டவரைவு முன்வைக்கப்பட்டால் தேவையான வசதிகளை வழங்க அரசாங்கம் தயாராகவுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். (ச-இ)

# புதிய திருமஞ்ச வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 14

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய புதிய திருமஞ்ச வெள்ளோட்ட விழா இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-66)

## வருவாயைவிட செலவு உயர்வு:

# நாட்டுக்கு நாளாந்தம் ரூ.543 கோடி கடன்!

கொழும்பு, ஓக. 14

அரசாங்கம் தனது பணிகளை நாளாந்தம் செயற்படுத்துவதற்கு 543 கோடி ரூபாவை கடனாகப் பெற வேண்டியுள்ளதென நிதி அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் அரசாங்கத்தின் சராசரி நாளாந்தச் செலவு ஆயிரத்து 425 கோடி ரூபாவாகப் பதிவாகியுள்ளது. அரசாங்கம் தனது அனைத்துச் செலவுகளையும் ஈடுகட்ட நாளொன்றுக்குக் கிட்டத்தட்ட 677 கோடி ரூபாவைக் கடனாகப் பெற வேண்டியுள்ளது. அரசாங்கம் தனது செலவினத்தில் 91 வீதத்தை தொடர் செலவுகளுக்காகவும் (சம்பளங்கள்) 9 வீதத்தை மூலதனச் செலவுகளுக்காகவும் செலவிடுகிறது. அதேவேளை, இந்த வருடத்தின் கடந்த ஐந்து மாதங்களில் அரசாங்கத்தின் மொத்த வருமானம் ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 243 கோடி ரூபாவாகவும் செலவு 2 இலட்சத்து 13 ஆயிரத்து 710 கோடி ரூபாவாகவும் காணப்படுகிறது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சைவிட்டு நீங்கா ஓராண்டு நினைவு

தாயின் மடியில்
12 • 11 • 1977



காலனின் பிடியில்
27 • 07 • 2022

### அமரர் தங்கராசா செந்தில்குமரன்

**திதி: தேய்பிறை சதுர்த்தசி**

எம்மை வாழவைத்த தெய்வமே - நீங்கள்
வாழாமல் பாதியிலே சென்றதேனோ
நிறைவாய் இருந்த எம் குடும்பத்தை
நிலைகுலைய வைத்துவிட்டானே - கொடியகாலன்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் - எங்கள் அப்பாவின்
ஆறுதல் இல்லையே எங்களுக்கு வாருங்கள்
- அப்பாவாருங்கள்
இப்போ வருவேன் என்று சொன்னீர்களே
இன்று வரை வீடு திரும்ப வில்லையே
எம்மை விட்டுச் சென்றது இப்போ போலிருக்க
ஒருநாள் இருநாள் என்று ஓராண்டாகி விட்டதே!
பாசம் என்றாலும் எங்கள் அப்பாதான்
பரிதவிப்பென்றாலும் எங்கள் அப்பாதான்
- வாருங்கள் அப்பா வாருங்கள்

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!**

**ஏழாலை கிழக்கு,**
**ஏழாலை.**

(cs.25911) (N.1)

உங்கள் பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்**

---

யா/ நீர்வேலி அத்தியார் இந்துவின்

## மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்




இன்று (14.08.2023) திங்கட்கிழமை ஓய்வுபெறும் எங்கள்

**உயர்தரப்பிரிவு பகுதித் தலைவர்**

### திருமதி வசந்தி சண்முகசுந்தரமூர்த்தி

(SLTS - I)

**சேவைக் காலம்**

01. இ/ வற்றுவெல தமிழ் கலவன் பாடசாலை - 31.05.1985 - 30.06.1987
02. இ/ தமிழ் மகா வித்தியாலயம் - 01.07.1987 - 28.02.1989
03. யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி - 01.03.1989 - 09.10.2012
04. யா/ அத்தியார் இந்துக் கல்லூரி - 10.10.2012 - இன்றுவரை

எண்ணமதை நிறைவாக்கி
நற்சேவையை வளமாக்கி
சமய நற்பணியை சிறப்பாக்கி
மாணவர் அடைவை வளமாக்கி
ஓய்வு பெற்றுள்ள எங்கள்
பகுதித் தலைவரே
வாழி பல்லாண்டு! வாழி பல்லாண்டு!

தொடர்பு:
**077 607 0742**


(cs51645) (N.1)

என வாழ்த்தும் :
**ஆசிரியர் நட்புறவுக் கழகத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 - 07 - 1929



மறைவு
13 - 08 - 2023

### சுப்பிரமணியம் கனகசபாபதி

(சமாதரன நீதவான், ஓய்வு பெற்ற அதிபர்)

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகசபாபதி நேற்று (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதிகளின் மருமகனும், செல்வமலரின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற Dr. வாசுகி மற்றும் ஜானகி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகசோதியின் பாசமிகு சகோதரனும், தயாளன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கணக்காய்வு அலுவலகம் வ.மா.ச) அருள்ஞானப்பிரகாசம் (பொறியியலாளர், நியூசிலாந்து), திருவிக்கிரகநாதன் ஆகியோரின் மாமனாரும், யாதவன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செலயகம் தென்மராட்சி) கஸ்தூரி (அவுஸ்ரேலியா), ஷகானன் (பொறியியலாளர், நியூசிலாந்து), மாதினி (நியூசிலாந்து), சுபாகர் (பொறியியலாளர், அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஸ்வேதாவின் அருமைப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நேற்று (13.08.2023)அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துவாரகை,**
**கைதடி மேற்கு,**
**கைதடி.**

தகவல்:
**குடும்பத்தினர்**
**வே. தயாளன் (077 681 5172) மருமகன்**

(CS 51647)(K-1)

---

## மரண அறிவித்தல்

பிறப்பு
14 - 06 - 1961



இறப்பு
13 - 08 - 2023

### நடராசா சுந்தரேஸ்வரி (மாம்பழம்)

வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராசா சுந்தரேஸ்வரி (மாம்பழம்) நேற்று (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா (நல்லூர், அரசடிச் சந்தி பழமுதிர்ச்சோலை முன்னாள் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை யோகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை நல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும், அகிலன் (படவரைஞர், உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் - கைதடி), ஆரூரன் (வைத்தியர், Lady Ridgeway Hospital - Colombo) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நளினமயூரதி (ஆசிரியை, யா/ தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), தயானி (வைத்தியர், Lady Rigeway Hospital - Colombo) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிவயோகநாதன் (லண்டன்), சிவகௌரி, சிவகுமார் (நோர்வே), சிவானந்தன் (ஆசிரியர், ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தியாகராசா, காலஞ்சென்ற பாக்கியலட்சுமி (தேவி) மற்றும் சரஸ்வதி (வேவி), ஆனந்தராசா (லண்டன்), மனோரஞ்சிதம் (ராணி), ரதிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), ரஜனி (லண்டன்), காலஞ்சென்ற சற்குணலிங்கம் (S.S ரேடர்ஸ் - ஹற்றன்) மற்றும் பகீரதி (நோர்வே), யசோதா (ஆசிரியை - நோர்வூட் தமிழ் மகாவித்தியாலயம்), ஆகியோரின் மைத்துனியும் கிஷானிகா, நயனிகா, ரித்விகன், வர்ணிஷா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ந. அகிலன் (மகன் ) : 077 226 9873**
**ந. ஆரூரன் (மகன்) : 077 756 0625**

(CS 51647)(K-1)

தகவல்:
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளியவளை சந்தைக்குள் விஷமிகள் புகுந்து அடாவடி!

## பொலிஸார் விசாரணை



முல்லைத்தீவு, ஓக. 14

முல்லைத்தீவு, கரைதுறைபற்றிலுள்ள முள்ளியவளை பொதுச் சந்தைக்குள் புகுந்த இனந்தெரியாத கும்பலொன்று வியாபாரி களின் மரக்கறிகள் உள்ளிட்ட சந்தைச் சொத்துக்களைச் சேதமாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு நடந்துள்ளது. சந்தையின் முன்வாயில் பூட்டப்பட்டிருந்த நிலையில் வாகனமொன்றில் மதுப் போத்தல்களுடன் வந்த கும்பலொன்றே சந்தையின் வாயிலை உடைத்து உட்புகுந்து அட்டகாசம் புரிந்துள் ளது என காவலாளி தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-19)


## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## சபை நிதி - 2023

01. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

02. விலைக் கேள்வியானது தேசியப்போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கோரப்படுகின்றது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப் படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
   1. கேள்விதாரர் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையில் (Sri Lanka Sustainable Energy Authority - SLSEA) Solar System வழங்குநராக பதிவு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.
   2. கேள்விதாரர் சூரிய கல தொகுதி சார்பாக பின்வரும் விடயங்களில் (Design, Planning, Supplying. Installing, Testing, Commissioning and Maintenance) மேற்கொள்வதில் குறைந்தது 02 வருட அனுபவம் உடைய கம்பனியாக இருத்தல் வேண்டும்.
   3. வழங்குநர் முழு சூரியகல அமைப்பினையும் பராமரிக்க கூடிய உள்நாட்டு முகவரை கொண்டிருப்பதுடன் இரு வார காலத்தினுள் உதிரிப்பாகங்களை வழங்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
   4. இலங்கையில் சூரிய கல உற்பத்தி மற்றும் அது சார்ந்த உதிரிப்பாகங்கள் வழங்குதல் தொடர்பான திருப்திகர சேவைப்பதிவை கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி 021-2250144, தொலைநகல் 021-2250144) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணமொன்றை வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் என்னும் முகவரியில் 14.08.2023 ஆம் திகதியிலிருந்து 28.08.2023 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 3000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் எனும் முகவரிக்கு 29.08.2023 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

07. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள் கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

08. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணை வைப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீடு (VAT நீங்கலாக) (Mn) | ஒப்பந்த காலம் | கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/41/ VWPS/G/ 03/2023 | Supply and Installation of Roof Top Solar System at Head Office, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram - 20 Kw (Supply, Installation, Commissioning and Maintenance of 20 Kw Grid Connected Solar PV System) | 4.2 | 30 நாட்கள் | 63 நாட்கள் | 31.10.2023 | 42,000.00 | 28.11.2023 |
| 2 | NP/14/41/ VWPS/G/ 04/2023 | Supply and Installation of Roof Top Solar System at Chankani Vegetable Market Complex - 40 Kw (Supply, Installation, Commissioning and Maintenance of 40 Kw Grid Connected Solar PV System) | 7.5 | 45 நாட்கள் | 77 நாட்கள் | 14.11.2023 | 75,000.00 | 12.12.2023 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்**
**14.08.2023**

(CR/40403)AH-1


# யாழ்.பல்கலையில் இன்று கருத்துரை

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண் கலைத்துறையின் ஏற்பாட்டில் 'மலையகத் தமிழர்களின் வரலாற்றைக் கட்டமைப்பதிலும் கட்டவிழ்ப்பதிலும் காண்பியச் சுவடிகள்' எனும் தலைப்பிலான கருத்துரை நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடக் கட்டடத் தொகுதியின் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-66)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் சிவரத்தினம் சுந்தரவேல்

(தபாலதிபர் - பிராந்திய கணக்கீட்டு காரியாலயம் - யாழ்ப்பாணம்)

மண் மகிழ 07.08.1968 — விண் நெகிழ 15.07.2023

கண் முன்னே வாழ்ந்தகாலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்.

இன்று (14.08.2023) திங்கட்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

மேலும் மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், பனர்கள், மலர் வளையம், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும் மேலும் மரணச்சடங்கிற்கு பல உதவிகள் புரிந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின் றோம்.

**உதயபாற்கந்தோர் வீதி,**
**புத்தூர்.**

**குடும்பத்தினர்**
**077 617 6571, 077 268 9101**

(cs 51644) (N.1)





நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் - 2023

அம்பிகை அடியார்களே !

இலங்கையின் வடபால் சப்ததீவுகளின் நடுநாயகமாக விளங்கும் நயினாதீவில் புவனேஸ்வரி பீடத்தில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் புனருத்தாரணம் செய்வதற்காக நிகழும் சோபகிருது வருஷம் ஆவணி மாதம் 15ஆம் நாள் வெள்ளிக்கிழமை (01.09.2023) பாலஸ்தாபன கிரியைகள் ஆரம்பமாகி ஆவணி மாதம் 17 ஆம் நாள் (03.09.2023) ஞாயிற்றுக்கிழமை ரேவதி நட்சத்திரமும் சதுர்த்தி திதியும் அமிர்தயோகமும் கூடிய காலை 9.01. மணி முதல் 11.05 மணி வரையுள்ள துலா லக்கின சுப வேளையில் பாலஸ்தாபனம் வேத. ஆகம முறைப்படி சிறப்புற நடைபெறத் திருவருளும் குருவருளும் கைகூடியுள்ளது எனவே அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு அம்பிக்கையினுடைய திருவருளை பெற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்தடுத்து...

இலங்கை ஜனாதிபதியாகப் பதவியேற்று ஓராண்டின் பின்னரே அண்மையில் தான் இந்தியாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்தார். இந்தியாவுடன் பல ஒப்பந்தங்களையும் முன்னெடுத்திருந்தார். இந்த நிலையிலேயே சீனாவின் கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்துக்கு மூன்று தினங்களுக்கு முன்னர் வருகை தந்திருந்தது. அது நேற்றுப் புறப்பட்டுச் சென்றது. இந்தக் கப்பல் தொடர்பில் இந்தியா கடும் அதிருப்தி வெளியிட்டிருந்த நிலையிலேயே மற்றொரு கப்பல் அதுவும் ஆராய்ச்சிக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வரவுள்ள செய்தி இந்தியாவுக்கு உவப்பானதாக இருக்கப்போவதில்லை என்று ஹிந்துஸ்தான் ரைம்ஸ் தனது செய்தியில் சுட்டிக் காட்டியுள்ளது.

சை யான் 6 என்ற ஆராய்ச்சிக் கப்பலே எதிர்வரும் ஒக்ரோபர் மாத இறுதியில் இலங்கைக்கு வந்து நவம்பர் மாத ஆரம்பத்தில் புறப்பட்டுச் செல்லவுள்ளது.

ஆயினும் இந்தக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கான அனுமதி இந்தத் தருணம் வரையில் வழங்கப்படவில்லை. தென்சீனக் கடலில் பயணித்துக்கொண்டிருக்கும் இந்தக் கப்பல் இலங்கை வந்ததும் இலங்கையின் நாரா நிறுவன விஞ்ஞானிகளும், சீனவிஞ்ஞானிகளும் இணைந்து ஆய்வுகளில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு சீனாவின் செய்மதிக் கப்பல் வந்தமையால் இந்தியா கடும் ஆட்சேபணைகளை எழுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

'குவாட் மற்றும் ஆசியான் நாடுகளுக்குப் பதிலடி கொடுக்கும் முகாமாக இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் தனது அணு ஆயுதக் கப்பல்களின் அதிகரித்த நடமாட்டத்தை சீனா ஆரம்பித்துள்ளமை பரகசியமாகியுள்ளது. இந்து சமுத்திரத்தில் இந்தியக்கடற்படையின் டீசல் நீர்மூழ்கிகளுக்கு சீனாவின் அணு நீர்மூழ்கிகள் பெரும் அச்சுறுத்தலாக அமையும். இந்து சமுத்திரத்தில் இந்தியக்கடற்படையின் பாதைகள் இந்தியாவின் கைகளிலிருந்து சீன சார்பு நாடுகளின் கைகளுக்குச் செல்வதை இந்திய கடற்படை உணர்ந்துள்ளது' எனவும் ஹிந்துஸ்தான் ரைம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ஒ.6)

## ஆர்ப்பாட்டங்களால்...

'இலங்கைக்கான எங்கள் ஆலோசனையை நாங்கள் மதிப்பாய்வு செய்துள்ளோம். எங்கள் ஆலோசனையின் அளவை நாங்கள் மாற்றவில்லை. அதிக எச்சரிக்கையுடன் செயற்படுங்கள். பொது ஆர்ப்பாட்டங்கள் இலங்கை முழுவதும் ஏற்படக்கூடும் என்பதுடன் வன்முறையாக மாறலாம். ஆர்ப்பாட்டங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தவிர்க்கவும். இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் சில உணவுகள் மற்றும் மருந்துகளுக்குத்தட்டுப்பாடு நிலவுகிறது' என அவுஸ்திரேலிய அரசாங்கம் தனது பயண எச்சரிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டங்கள் போக்குவரத்து மற்றும் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறுகளை ஏற்படுத்தும், பொது அவசரநிலைகள் அறிவிக்கப்படலாம். ஊரடங்குச் சட்டம்விதிக்கப்படலாம்என்றுபயண ஆலோசனையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் தொடர்ந்து பயங்கரவாதத் தாக்குதல் அபாயம் இருப்பதாகவும், வெளிநாட்டவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் பகுதிகளை பயங்கரவாதிகள் குறிவைக்கக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

'எப்பொழுதும் பயண மற்றும் அடையாள ஆவணங்களை எடுத்துச் செல்லுங்கள். குறிப்பாக விமான நிலையங்களில் பாதுகாப்புச் சோதனைகளை மேற்கொள்ள கூடுதல் நேரத்தை அனுமதிக்கவும்' என்று அவுஸ்திரேலிய அரசு தெரிவித்துள்ளது. (அ-ஒ.6)

## மீண்டும்...

நாம் வங்குரோத்து நிலையை அடைவோம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மாத்தளை புனித தோமஸ் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 150 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இதனைமுன்னிட்டு பாடசாலையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் பங்கேற்றபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வருட இறுதிக்குள், கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால், அதைச் செய்ய அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தவேண்டும். அதேபோன்று நாடு உற்பத்திப் பொருளாதாரத்துக்கு மாறுவதும் அவசியம். அந்தத் திட்டத்தை தற்போது செயற்படுத்தியுள்ளோம்.

ஒரு வியாபாரத்தை நடத்துவது போன்ற நிதி ஒழுக்கம் இங்கு இருக்க வேண்டும் மற்றும் ஒவ்வொரு அரச நிறுவனத்திலிருந்தும் உச்ச பலன்களைப் பெற வேண்டும். தற்போது அமைச்சுகளின் தேவையற்ற செலவுகளைக் குறைக்க நாம் திட்டமிட்டுள்ளோம். மேலும், அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலம், கட்டடங்கள், வாகனங்கள் தொடர்பான அறிக்கை தயாரிக்கும் பணிகள், பிரதமரின் செயலர் தலைமையில் நடைபெறுகின்றது.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புதொடர்பான முன்மொழிவுகள் தற்போது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், துரதிர்ஷ்டவசமாக சிலர் நீதிமன்றம் சென்று இதைத்தடுக்க முயன்றனர். அதன்போது முன்வைக்கப்பட்ட பிரதான பிரச்சினை தான், ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான விடயம். ஆனால், தற்போது அனைத்து ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களுக்கும் ஒ சதவீத வட்டி வழங்குவதற்கான சட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, இந்தத் திட்டத்தை நிறுத்த எந்தக் காரணமும் இல்லை.

அரசமைப்பின் 4 ஆவது சரத்தின்படி, நிதி அதிகாரங்கள் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே, இந்தச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கேயன்றி வேறு எவருக்கும் இல்லை. மேலும், இது தொடர்பாக தொடரப்பட்ட அனைத்து வழக்குகளும் தற்போது உயர்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை நிறைவு செய்த பிறகு, பொருளாதார வேலைத் திட்டத்தை நாம் சரியாகச் செயற்படுத்தவேண்டும். இன்று பலர் இந்த நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அவ்வாறு நாட்டை விட்டு வெளியேறிய தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது, அந்த இடைவெளியை நம்மால் எளிதில் நிரப்ப முடியாது. ஆயினும் அனைவரும் வாழக்கூடிய சிறந்த பொருளாதாரப் பின்னணியை இந்த நாட்டில் கட்டியெழுப்புவதற்கு நாம் இப்போது அர்ப்பணிப்புடன் உள்ளோம் என்றே கூற வேண்டும்.

அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வருமானம், செலவுகளுக்குப் போதுமானதாக இல்லை, ஏற்றுமதி வருமானத்தை விட இறக்குமதிச் செலவு அதிகரித்திருப்பது இன்று நம் நாடு முகங்கொடுக்கும் முக்கியமான இரண்டு பிரச்சினைகளாகும். இதற்காக நாம் ஒவ்வொரு நாளும் கடன் வாங்க முடியாது. கடன் மறுசீரமைப்புக்குப் பிறகு, மீண்டும் இந்தப் பிரச்சினை தோன்றும். அதை நாம் தடுக்கவேண்டும். அதற்கு மொத்தத் தேசிய உற்பத்தியை வேகமாக அதிகரிக்கவேண்டும். மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரிக்கும்போது, நாட்டின் வருமானம் அதிகரிக்கும். மறுபுறம், ஏற்றுமதியை அதிகரிக்கவேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில் இந்தத் திட்டத்தை நாம் செயற்படுத்த வேண்டியுள்ளது - என்றார். (அ-ஒ.26)

## விகாரைகளில்...

மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். பொது நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டுமெனில் இந்நாட்டில் உள்ள கள்வர்களைப் பிடிக்க வேண்டும், திருடர்கள், தரகுப்பணக்காரர்களை விரட்ட வேண்டும். நாட்டில் மின்சாரம் இல்லை, விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன, நீர்க் கட்டணம் அதிகரித்துள்ளது. நிலைமை இப்படி இருக்க நுவரெலியாவில் ராஜபக்ச குடும்பம் கிரிக்கெட் விளையாடுகின்றது. இது விளையாடக்கூடிய நேரமா?' எனவும் மேர்வின் கேள்வி எழுப்பினார். (அ-ஒ.26)


கிராபிக் டிசைனர் தேவை

ஈஸ்வா டிஜிற்றல் அச்சகம்

077 165 9845


## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை

**இயக்கச்சி சந்தைக்கடைத் தொகுதியிலுள்ள கடை இல PS-09 கடையினை 01.09.2023 ஆம் திகதி தொடக்கம் நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான**

### கேள்வி அறிவித்தல் -2023

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** :- 14.08.2023 தொடக்கம் 27.08.2023 வரை (அலுவலக நேரம் )

**கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி** :- 28.08.2023 பிற்பகல் 2 மணி

**கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி** :- 28.08.2023 பிற்பகல் 2 மணி

**கேள்வி திறக்கப்படும் இடம்** :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

பேருந்து தரிப்பிட மேல்மாடிக் கடைக்கான கேள்வி அட்டவணை.

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | PS - 09 | 252000.00 | 25200.00 | 2,000.00 |

### நிபந்தனைகள்:-

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 28.08.2023 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
5. அரசஉத்தியோகத்தர்கள் கடைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது.
6. நீண்டகால கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும். குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
7. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
8. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
9. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புபணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
11. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமதி த.தர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

(CR/ )AH-1

**14.08.2023.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### '13'ஐ...
தேவி பிரிவெனவில் பூசை நடத்தியுள்ளார். 13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் நாட்டுக்கு ஏற்படும் ஆபத்தைப் புரிந்துகொள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புத்தி தெளிவு கிடைக்க வேண்டும் என்பதற்காக அபய திஸ்ஸ தேரர் இந்த பூசையை நடத்தியுள்ளார்.
சிங்களத் தேசிய அமைப்புகள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி குணதாச அமரசேகர, மருத்துவர் வசந்த பண்டார உட்படப் பலர் இந்தப் பூசையில் கலந்துகொண்டிருந்தனர். (அ-ஒ.இ)

### சிறுமி...
காணப்பட்டன. இது தொடர்பில் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில், கடந்த 10ஆம் திகதி உயிரிழந்தவரின் வீட்டுக்கு அருகிலுள்ள பெண் ஒருவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் அவரது மகளைப் பாடசாலைக்கு ஏற்றி இறக்குமாறு மகேந்திரத்திடம் கோரியுள்ளார். அன்றையதினம் அவரது 8 வயது மகள் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வரும்போது கண்கள் சிவந்த நிலையில் உடல்சோர்வடைந்து வந்துள்ளார். மறுநாள் பாடசாலைக்குச் சென்ற அந்தச் சிறுமி அங்கு மயங்கி விழுந்துள்ளார். இதனையடுத்து சிறுமியின் தாய் பாடசாலைக்குச் சென்று பிள்ளையிடம் விசாரித்தபோதே, மகேந்திரம் அவரை துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக சிறுமி குறிப்பிட்டுள்ளார். இதன் பின்னர் சிறுமியின் மாமனார் சித்தன்கேணியிலுள்ள வீட்டுக்கு மகேந்திரத்தை ஏற்றிச் சென்று அங்கு கடுமையாக அடித்து தாக்கிய பின்னர் அவரை மீண்டும் கல்வியன் காட்டில் உள்ள வீட்டுக்குக் கொண்டு வந்து இறக்கியுள்ளார். அன்றைய தினமே அவர் உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளில் கண்டறிந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.
உடற்கூற்றுப் பரிசோதனைகளில், ஏற்கனவே இருதயநோயால் பாதிக்கப்பட்டிருந்த மகேந்திரத்துக்கு மொட்டையான ஆயுதத்தால் அடித்தமையால், உடல் முழுவதும் கண்டல் காயங்கள் ஏற்பட்டு அதனால் உயிரிழப்பு சம்பவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இதே வேளை - 8 வயதுச் சிறுமியின் தாயார் வழங்கிய வாக்குமூலத்துக்கு அமைவாக, சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டாரா என்று, இன்று மருத்துவப்பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ஒ.26,27)

### ஆர்.எஸ்.எஸ்...
பாடுகள் அதிகரித்து வருவதாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுவரும் சூழலில் இரத்தினபுரி, இறக்குவானையில் நேற்று நடைபெற்றுள்ள சம்பவம் அதனை உறுதிப்படுத்தியுள்ளது.
பெருந்தோட்டப்பகுதிகளை மையப்படுத்தி ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் செயற்பாடுகளை விரிவுபடுத்தும் முயற்சிகளின் ஒரு கட்டமாக இறக்குவானை சிறி முத்துமாரியம்மன் ஆலயத்தில் பலாங்கொடை மற்றும் இரத்தினபுரியை மையப்படுத்தி இயங்கும் செயற்பாட்டாளர்கள் நேற்று மு.ப. 10 மணியளவில் கூட்டமொன்றை நடத்தியுள்ளனர்.
இக்கூட்டத்தில் இறக்குவானை நகர் மற்றும் அண்டிய தோட்டப்பகுதியில் உள்ள மக்களை இவர்கள் அழைத்துள்ளனர். கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளவர்களுக்குத் தீவிர இந்து மதப் போதனைகளை வழங்குவதாகச் சிலர் கூச்சலிட இந்த விடயத்தில் ஆலய நிர்வாக சபையினர் தலையிட்டுள்ளனர். தீவிர இந்து மதப் போதனைகளுக்கு அனுமதிக்க முடியாதெனவும் இது மதவாதப் போக்குக்கே வழிவகுக்கும் எனவும் கூறி, கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டு போதனைக்காக வந்தவர்களும் ஆலய நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டுள்ளனர். (அ-ஒ.இ)

### குளவி...
காரைநகர், களபூமியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சிவபாக்கியம் (வயது - 63) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
ஆலயத்தில் வழமைபோன்று துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது குளவிகளின் கொட்டுதலுக்கு நேற்றுமுன்தினம் இலக்காகியுள்ளார். ஆலயப்பணிகளை முடித்து வீடுதிரும்பி, குளவி கொட்டிய விடயத்தை வீட்டாரிடம் தெரியப்படுத்தியுள்ளார். இதனையடுத்து அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். இந்த நிலையில் நேற்றுக்காலை அவர் உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ.26)

### மாவிட்டபுரம்...
இன்று அதிகாலை 3.30 மணியளவில் அபிஷேக பூசை ஆராதனைகள் ஆரம்பமாகி இடம்பெறும். காலை 6.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும், காலை 9.30 மணியளவில் சண்முகப் பெருமான் தேரில் வீதி உலா வரும் திருக்காட்சியும் இடம்பெறும்.
ஆடி அமாவாசை விரத நாளான நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து அதிகாலை 5 மணியளவில் மாவைக் கந்தப்பெருமான் மேற்படி ஆலயத்திலிருந்து புறப்பட்டு கீரிமலை கண்டகி தீர்த்தக் கரைக்கு எழுந்தருளி அங்கு நகுலேஸ்வரப் பெருமானுடன் இணைந்து காலை 6.30 மணியளவில் தீர்த்தமாடி தீர்த்தக் கரை மண்டபத்தில் நாளை மாலை 6 மணி வரை மாவைக் கந்தப் பெருமான் அடியவர்களுக்கு காட்சி தருவார் என மேற்படி ஆலய ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ து. இரத்தினசபாபதிக் குருக்கள் தெரிவித்தார். (அ-ஒ.66)

### லொறியுடன்...
ஏ - 9 வீதியில் கைதடி, நுணாவில் வைரவர் கோயிலடியில் நேற்று மு.ப. 11 மணியளவில் இடம்பெற்ற விபத்திலேயே, சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கையைச் சேர்ந்த சிவபாலன் பிரவீண் (வயது - 19) என்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் உயிரிழந்துள்ளான்.
சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மாணவன் பயணித்துள்ளான். அதேசமயம் யாழ்ப்பாணத்திலிருந்து விசுவமடு சுவாரித்திடல் நோக்கி லொறியொன்றும் பயணித்துள்ளது. மாணவன் முன்னே சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முயன்றபோதே எதிர்த்திசையில் பயணித்த லொறியுடன் நேருக்கு நேர் மோதுண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான். (அ-ஒ.9,27,66,125,131)



## மரண அறிவித்தல்




### சிவபாலன் பிரவீன்
(யாழ்.இந்துக் கல்லூரி உயிரியல் விஞ்ஞானபீட மாணவன்-2023)

சாவகச்சேரி கண்டுவில் முதலாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிவபாலன் பிரவீன் (யாழ்.இந்துக் கல்லூரியின் உயர்தர உயிரியல் விஞ்ஞானபீட மாணவன் -2023) 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் சிவபாலன் (ஓய்வுபெற்ற விவசாயத் திணைக்களப் போதனா ஆசிரியர்) - நந்தினி ஆகியோரின் அன்பு மகனும் பிரசாந்தன் (U.K.) , பிரசன்னா (பிரான்ஸ்), பிரியந்தன் (மென்பொறியியலாளர், இலங்கை) ஆகியோரின் பாசமிகு தம்பியும் காலஞ்சென்ற அமரர் ஆண்டி ஐயா அன்னம்மா மற்றும் தங்கவேலாயுதம் சாரதாதேவி ஆகியோரின் அன்புப் பேரனும் வித்தியா (U.K.), கீர்த்திகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பவின், தியா (U.K.) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2023) திங்கட்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 9494787, 0777245886

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 06 . 1940



மறைவு 13 . 08 . 2023

### இளையதம்பி கதிர்காமத்தம்பி

வன்னியர் கோயிலடி, வயாவிளானைப் பிறப்பிடமாகவும், செல்லத்துரை வீதி, உரும்பிராய் தெற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி கதிர்காமத்தம்பி நேற்று (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி, பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, வேலாயுதபிள்ளை, புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சியாமளா, பிறேமலா, மஞ்சுளா, சுரேந்திரன், விஜிகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரன், விஜயரட்ணம், விக்னேஸ்வரன், உஷாந்தினி, செல்வசீலன் ஆகியோரின் அன்பு மாமனும், ரஜீவ், பிருந்தா, நிரோஸ்னா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், சுபீட்சனா, சுபீட்சன், சாயி, தமிழினி, தமிழவன், அஸ்வினி, மகிழினி, கிருத்திகா, ஹர்ணி, சைலயன், லிபினியா, பரதன், துஷாந், லக்ஷரா, டிலா, கிரிஷ், ஜலா, ஹஷ்வி, அர்ஜின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.08.2023 புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் தெற்கு வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

076 5871 936
077 1999 655

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25946) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்துக்குண்டுகளால் உக்ரைன் தாக்குதல்!



## போர்க்குற்றம் என்று ரஷ்யா குற்றச்சாட்டு

**கீவ், ஓக. 14**
**உக்ரைன் எல்லைக்குள், ரஷ்யாவை ஆதரிக்கும் டொனட்ஸ்க் பகுதியில், உக்ரைன் படைகள் கொத்துக் குண்டுகளால் தாக்குதல் நடத்தியுள்ளன என்று ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.**

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிராக ரஷ்யா ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை சுமார் 550 நாள்களாக அங்கு இடம்பெற்றுவருகின்றது. இந்தப் போரில் அமெரிக்காவும், நேட்டோ கூட்டணி நாடுகளும் ஏகப்பட்ட இராணுவ உதவிகளை உக்ரைனுக்கு வழங்கியிருந்தன. எனினும், ரஷ்யாவைப் பணியவைக்கவோ அல்லது வீழ்ச்சியடைய வைக்கவோ முடியவில்லை. உக்ரைனும் இந்த ஆயுதக் குவியலால் ரஷ்யாவை வலுவாகவே எதிர்த்து வருகின்றது. இந்த நிலையில், உலகமே எதிர்பாராத வகையில் உக்ரைனுக்கு கடந்த சில வாரத்துக்கு முன்னர் கொத்துக் குண்டுகளை வழங்கியது அமெரிக்கா. இதற்கு உக்ரைன் ஆதரவு நாடுகள்கூட எதிர்ப்பை வெளியிட்டன.

ஆனால், நிபந்தனை களுடன் தான் உக்ரைனுக்கு இவை வழங்கப்படுகின்றன என்றும், பொது மக்களுக்கு எதிராக இவை பயன்படுத்தப் படாது என்ற வாக்குறுதி உக்ரைனிடம் பெறப்பட்டுள்ளது என்று அமெரிக்கா தெரிவித்திருந்தது. இந்த நிலையிலேயே பொது மக்களுக்கு எதிராகத் தற்போது கொத்துக் குண்டு களைப் பயன்படுத்தியுள்ளது உக்ரைன். (ம)


# அமைதி முயற்சிகளுக்கு உக்ரைன் முட்டுக்கட்டை

## கிரம்ளின் அறிக்கை

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு மும்முனைப் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில், உக்ரைே அமைதிக்குத் தடையாய் இருக்கின்றது என்று கிரம்ளின் குற்றஞ்சாட்டியுள்ளது.

உக்ரைன் விவகாரத்தில், துருக்கியேவின் அதிபர் எர்டோகன் மற்றும் ரஷ்ய அதிபர் புடின் இருவரும் துருக்கியேவில் சந்தித்துப் பேச்சு நடத்துவதாக இருந்தது. தற்போது உக்ரைன், அமெரிக்கா வழங்கிய கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தி போர்க்குற்றம் புரிந்துள்ளமையால் இந்த அமைதிப் பேச்சு முயற்சி கைவிடப்படும் நிலைமை தோன்றியுள்ளது.


ரஷ்யாவின் தலைமையில் ஆபிரிக்க நாடுகள் பல ஒன்றிணைந்து பரந்துபட்ட இராணுவக் கூட்டணியொன்று அமைக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)




# ஈபிளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

லண்டன், ஓக. 14
பிரான்ஸிலுள்ள ஈபிள் கோபுரத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதனையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பார்வையாளர்கள் வெளியேற்றப்பட்டனர். பின்னர் அந்த மிரட்டல் போலியானது என தெரியவந்ததையடுத்து ஈபிள் கோபுரம் சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறக்கப்பட்டது. (ச)





# 'சந்திராயன்' - 'லூனா 25' நிலவைத் தொடும் போட்டி

மொஸ்கோ, ஓக. 13
தென்துருவத்தை ஆராயவென ரஷ்யாவால் 47 ஆண்டுகளுக்குப் பிறகு நேற்றுமுன்தினம் 'லூனா 25' விண்கலம் வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ளது. இதனைக் கடந்த மாதம் ஏவப்பட்ட இந்தியாவின் 'சந்திராயன்-3'க்கு முன்பதாக தரையிறக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பெரும் வல்லரசுகள் அனைத்தும் நிலவை ஆய்வு செய்து வருகின்றன. தென்துருவத்தில் எந்த நாடும் மென்மையான தரையிறக்கம் செய்யவில்லை. அந்த முயற்சியை 'சந்திராயன் 3' மற்றும் லூனா 25 எடுத்துள்ளன.

இரண்டும் எதிர்வரும் 23ஆம் திகதி சந்திரனின் தென்துருவத்தில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தவகையில் தற்போது எந்த நாட்டின் விண்கலம் முதலில் தரையிறங்கும் என்பதே போட்டியாகக் காணப்படுகிறது. (ச)

அம்பாந்தோட்டை மருத்துவமனையில் இருந்த

# ஒரேயொரு மயக்கவியல் நிபுணரும் நாட்டை விட்டு வெளியேற்றம்

## தீவிர சிகிச்சைகள் நிறுத்தம்

கொழும்பு, ஓக. 14
அம்பாந்தோட்டை பொது மருத்துவமனையின் ஒரேயொரு மயக்கவியல் நிபுணர், உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல் வெளிநாடு சென்றுள்ளதால் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவின் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

விடுமுறை பெற்று சென்றிருந்த மயக்கவியல் நிபுணர், தாம் தற்போது இங்கிலாந்துக்குச் சென்றுள்ளதாக சக மருத்துவர்களுக்கு அறிவித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்தநிலையில், குறித்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அறியப்படுத்தியுள்ளதாக அம்பாந்தோட்டை பொது மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-ஒ.இ)

# ஜனாதிபதி தேர்தல் பரப்புரை ஆண்டிறுதியில் ஆரம்பம்

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் லன்சா தலைமையில் உருவாகியுள்ள ரணிலின் புதிய கூட்டணியின் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகள் ஆண்டிறுதியில் ஆரம்பமாகவுள்ளன என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் லன்சா புதிய கூட்டணியை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருவதுடன், இராஜகிரிய பிரதேசத்தில் அலுவலகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார். செப்ரெம்பர் முதல்வாரத்தில் இந்த அலுவலகம் திறக்கப்படவுள்ளது.

இந்தக் குழுவில் சுமார் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளதாகவும், சுதந்திரக் கட்சியின் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் இணைய உள்ளதாகவும், தற்போது சுயாதீன உறுப்பினர்களாக இயங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டணியில் இணைந்துகொள்ள உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஆகியோரையும் இந்தக் கூட்டணியில் இணைத்துக்கொள்ள பேச்சுகளும் நடத்தப்பட்டுள்ளன. இந்தக் கூட்டணிக்குப் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து தமது எதிர்ப்பையும் அவர் வெளியிட்டிருந்தார். இந்நிலையில், விரைவில் லன்சா தலைமையிலான குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கவுள்ளது. கூட்டணியின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன என்றும் கொழும்பு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (அ-ஒ.இ)

# பாடசாலை மாணவர்களை பதம்பார்த்த சாதி கொடூரம்

சென்னை, ஓக. 14
தமிழகத்தின் நெல்லை மாவட்டம், நாங்குநேரியிலுள்ள பாடசாலையொன்றில் கல்வி பயிலும் சகோதரர்கள் இருவரை அவர்களின் வீட்டுக்குள் சாதிய வன்மத்தோடு புகுந்து பாடசாலையில் படிக்கும் சகமாணவர்கள் வாள்களால் வெட்டிய சம்பவம் தமிழகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:- 12ஆம் வகுப்பில் நன்றாகப் படிக்கும் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த மாணவனை ஆசிரியர்கள் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். அது மாற்று சாதியைச் சேர்ந்த சக மாணவர்கள் சிலருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால் சக மாணவர்கள் ஆறு பேர் கையில் அரிவாளுடன் அண்மையில் நாங்குநேரியிலுள்ள குறித்த மாணவனின் வீட்டுக்குள் புகுந்து கொடூரமாக வெட்டியுள்ளனர். அதைத் தடுத்த அவரின் சகோதரி மீதும் வாள்வெட்டு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வெட்டுக்காயங்களுக்குள்ளான மாணவர்கள் மீட்கப்பட்டு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டுக்கே பெரும் தலைகுனிவை ஏற்படுத்தியிருக்கும் இந்தச் சம்பவத்துக்குப் பல்வேறு அரசியல் தலைவர்கள், திரைப்பிரபலங்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘13’ இனை விஸ்தரிப்பதற்கு இது உரிய தருணமல்ல!

## பொதுஜன பெரமுன எதிர்ப்பு

கொழும்பு, ஓக. 14

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், மேலும் விஸ்தரிப் பதற்கும் இது உரிய தருணமல்ல என பொதுஜன பெரமுனவின் பொதுச்செய லாளர் சாகரகாரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

13ஆவது திருத்தம் தொடர்பில் கட்சியின் நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் தெரியப்படுத்துவோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாக உள்ள பொதுஜன பெரமுனவின் பிரிவும் இந்த நிலைப்பாட்டை ஆதரித்துள்ளது. பலவீனமான பொருளாதார நிலை காரணமாக அரசாங்கமே நெருக்கடியான நிலையில் உள்ள இந்தத் தருணத்தில் அரசாங்கம் 13ஆவது திருத்தத்தை விஸ்தரிப்பதற்கு இணங்கினால் அரசாங்கம் தேவையற்ற அழுத்தத்துக்கு உள்ளாகலாம். நாடு வலுவான பொருளாதாரநிலையில் உள்ளபோது 13ஆவது திருத்தத்தை விஸ்தரிப்பது தொடர்பாகச் சிந்திக்க லாம் என்ற யோசனையை முன்வைக்கவுள்ளோம் - என்றார். (எ-இ)


**கடை விற்பனைக்கு**

வண்ணார்பண்ணை
சிவன்கோவிலுக்கு முன் வீதியில்
கடையொன்று
விற்பனைக்குண்டு. (CS/51641) AH-1

**077 138 0670**



**வாடகைக்கு விடப்படும்**

நுணாவில் 190 ஆம் கட்டையடியில் 3 கடைகள் வாடகைக்கு விடப்படும். கடைக்கு மேல் உள்ள மாடியில் 2 வீடுகள் வாடகைக்கு விடப்படும். (CS 5181)(E-1)

தொடர்பு : **077 939 7713**
**077 467 5160**



**வேலையாட்கள் தேவை**

புடைவைக் கடையொன்றுக்கு ஆண், பெண் விற்பனையாளர் தேவை. (சுன்னாகத்தை அண்மித்த பகுதிகளில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)
பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு:
**077 17 23554**



**வேலைவாய்ப்பு**

1. Graphic Designer (கிராப்பிக் டிசைனர்)
2. Marketing Staff
(சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்)



மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ளவர்கள் இன்று (14.08.2023) திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை தங்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் சமுகம்தரவும்.

உதயன்

**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


# சடலம் மீட்பு!

*சாவகச்சேரி, ஓக. 14*

*மட்டுவில் கிழக்கில் குடும்பத் தலைவர் ஒருவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நெல்லியடி தபாலகத்தில் பணிபுரியும் 36 வயதான குடும்பத் தலைவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ஒ-131)*


ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமக

**மரண அறிவித்தல்**

தோற்றம் • 06 • 09 • 1977



மறைவு • 13 • 08 • 2023

**திருமதி கலைச்செல்வம் வனிதா**

நயினாதீவு 5 ஆம் வட்டாரம் காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலைச்செல்வம் வனிதா நேற்று (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகேஸ் புவனேஸ்வரி (கட்டைப்பிராய் கலைமணி வீதி) தம்பதியரின் அன்பு மருமகளும், கனகேஸ்வரியின் பெறாமகளும், கலைச்செல்வத்தின் பாசமிகு மனைவியும், ஆர்த்திகா, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு தாயாரும், லோகேஸ்வரன் (சுரேஸ்), ஜிவிதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரியா, பத்மசிறி, அனுஷியா ஆகியோரின் மைத்துனியும், வினோதனின் (நித்தி) சகலியும், கஜானன், சரண்ஜன், தருண்ஜன், சுஜீவன், பிரசன்னா ஆகியோரின் மாமியாரும், அபிசனாவின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2023) திங்கட்கிழமை கோப்பாய் தெற்கு கட்டைப்பிராய் (கலைமணி வீதியில்) அமைந்துள்ள அவரது இல்லத்தில் காலை 7.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 12.30 மணியளவில் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: **077 736 2154**
**077 666 9509**

தகவல்:
**குடும்பத்தினர்**
(cs 51643) (N.1)



**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**

தோற்றம் 10 – 04 – 1968



மறைவு 17 – 07 – 2023

கடந்த (17.07.2023) திங்கட்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் வேலாயுதம் சிவசக்திவேல்**

(பிரதி அதிபர் - யா/ இணுவில் இந்துக் கல்லூரி.
முன்னாள் அதிபர் - யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.08.2023) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (16.08.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

M.S.வீதி,
**கோண்டாவில்.**

**குடும்பத்தினர்**
**077 654 4372**




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org